**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**
**அ.வ.எண்.41/2018**

தேதி . 07.04.2021

பெயர் . சின்ன ராஜன்

த/பெ . பரசுராம செட்டி

வயது . 67

வா.சா. 1

**குறுக்கு விசாரணை**

வழக்கு சொத்தின் சர்வே எண் என்ன என்றால் பழைய சர்வே எண்.251/1, புதிய சர்வே எண் 413/15. கிராம நத்தமா பட்டா நிலமா என்றால் கிராம நத்தம். நான் அனுபவித்து வருகிறேன் என்பதை காட்ட பட்டா, சிட்டா, அடங்கல் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வரி ரசீது தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்து காலி இடம் வீடு கிடையாது என்றால் கழிவறை உள்ளது வீடு கிடையாது. கிராம நத்த நிலத்திற்கு வீடு இருந்தால் தான் வரி கட்ட முடியும் எந்த வரி ரசீதும் தாக்கல் செய்யவில்லை என்றால் கட்டியுள்ளேன் ஆனால் தாக்கல் செய்யவில்லை. வழக்கு சொத்திற்கும் என் வீட்டிற்கும் நடுவில் ரோடு என்றால் சரிதான். பொதுவாக அவர் அவர் வீட்டிற்கு பின் பக்கம் தான் கழிவறை கட்டுவார்கள் வழக்கு சொத்தில் கழிவறை கட்டியுள்ளேன் என்று சொல்வது பொய் என்றால் கழிவறை கட்டுவதற்காக தான் நான் வழக்கு சொத்தை வாங்கினேன். நான் யாரிடம் இருந்து சொத்து வாங்கினேன் என்றால் கண்ணம்மா, பட்டாபி சேகர். கண்ணம்மா, பட்டாபி சேகர் அவர்களின் சொத்து என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அவர்களுக்கு பூர்வீக சொத்து பத்தரம் கிடையாது. கண்ணம்மாளுக்கு ஜெகன்நாதன் என்ன வேண்டும் என்றால் பங்காலி உறவு முறை. சொத்து முழுவதும் ஜெகன்நாதனுக்கு தான் சொந்தம் என்றால் கண்ணம்மாளுக்கு தான் பாத்தியம் SLR தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்து நான் வாங்கும் போது SLR போட்டு பார்த்தேனா என்றால் இல்லை தற்போது தான் பார்த்தேன். கண்ணம்மாள் பெயரில் பட்டா, சிட்டா, அடங்கல் இல்லாமல் அவரிடமிருந்து சொத்தை வாங்கியது செல்லாது என்றால் VAOவிடம் பட்டாசிட்டா, வாங்கினேன். அந்த பட்டா, சிட்டா, அடங்கல் நான் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பட்டா, சிட்டா, அடங்கல் கண்ணம்மாள் பெயரில் இல்லை இருந்ததிருந்தால் நான்

தாக்கல் செய்து இருப்பேன் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் SLR வாங்கினேன் என்றால் சரிதான். கண்ணம்மாள் நான் எந்த காலத்திலும் வழக்கு சொத்தில் அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல. கிராம நத்தத்தில் வீடு இருந்ததால் தான் பட்டா கொடுப்பார்கள் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த ரசீது போலியானது என்றால் சரியல்ல. ஜெகன்நாதனின் மகன் தான் 1ம் பிரதிவாதி என்றால் சரிதான். ம் பிரதிவாதியின் பூர்வீக சொத்து கண்ணம்மாளுக்கு எந்த வித உரிமையும் கிடையாது நான் வழக்கு சொத்தில் எந்த காலத்திலும் அனுபவத்தில் இருந்ததில்லை என்றால் சரியல்ல. நான் வாங்கும் போது EC போட்டு பார்த்தேனா என்றால் பார்த்தேன். அந்த EC தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு தாக்கல் செய்த பிறகு வா.த.சா.ஆ6 ல் 75 வருடத்திற்கு EC போட்டு பார்த்தேன் என்றால் சரிதான். நான் தான் அனுபவத்தில் இருக்கிறேன் என்பதை நிரூபிக்க சர்வே கமிஷன் மனு தாக்கல் செய்ய போகிறேனா என்றால் இல்லை. SLR என்னுடைய உரிமை, அனுபவத்தையும் காட்டது என்பதால் செல்லாது என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**